1990 மார்ச் 31]

இராமிய நூற்பு நிலையம்.

* 5372—திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரத்திலும் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா இடையர்காடு கிராமத்திலும் பெண்களுக்கான கிராமிய நூற்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வ.உ.சி. மாவட்டம் திம்மராஜபுரம் மற்றும் இடையர்காடு கிராமங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய நிலங்கள் பாதிப்பு.

* 893—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மல்பார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையிலுள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையில் உள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக பொது மக்களிடமிருந்து எந்தவிதமான முறையீடுகளும் வரவில்லை.

(ஆ) எனினும் இதுபற்றி கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேரளா மாசு கட்டுப்பாட்டு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே E. S. P. இயந்திரம் நிறுவப்பட்டிருந்தும், மின்சாரத்தைக் குறைப்பதற்காக அதனை இயக்காத காரணத்தால் அங்கே இருக்கிற புகையிலே இருக்கின்ற தூசிகளின் காரணத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசோடு தொடர்பு கொண்டதில் ராமில்-எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிப்பிட்டேட்டர், சிமெண்ட் உரை-எலக்ட்ரோ ஸ்டேட்டிக் பிரிசிப்பிட்டேட்டர், கோல்மில்-மல்டி சைக்ளோன்ஸ், தூசிகள் சேகரிப்பான், கிளிங்கர் கலர்-மல்டி சைக்ளோன்ஸ், பேச்சிங் கவுஸ்-தூசிகளை சேகரிப்பான் போன்ற 5 கருவிகளை நிறுவி இருப்பதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேற்படி கருவிகளின் திறன் குறித்து கேரள அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியம் கண்காணித்து வருகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலபார் சிமெண்ட் தொழிற்சாலை என்பது கோவை மாவட்டத்தின் எல்லையிலே இருக்கிறது. அதையடுத்து மூன்று மைல் வித்தியாசத்தில்தான் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. ஏதோ கட்டெறும்பு கடிக்கின்றது என்று பயந்து தேள் குழியில் விழுந்ததைப் போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையில் இருந்து வரக்கூடிய புகையினால் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் பூமிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தென்னந்தோப்புகள் எல்லாம் கருகி பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முறையிட்டு அதற்கு இப்போதுதான் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மலபார் சிமெண்ட் பேக்டரியிலிருந்து வரக்கூடிய புகையினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று புகார் எதுவும் பொது மக்களிடத்திலிருந்து வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே பயிர் பச்சை எல்லாம் பாழாகி, அந்த சிமெண்ட் படிவங்களால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினா. விளக்கவுரை அல்ல.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 5 வகையான இயந்திரங்கள் இவற்றைக் கட்டுப்படுத்துகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும்

1990 மார்ச் 31]

அதைக் கண்காணித்து விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு, உரிய நடவடிக்கை அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைக் கருத்தில் கொண்டு கேரள அரசோடு தொடர்பு கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக ஏற்பாடாக 5 வகையான இயந்திரங்கள் வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றின் மூலம் நிச்சயமாக அந்தத் தூசியைத் தடுக்க முடியாது. இதே பிரச்சினை தமிழ்நாடு சிமென்ட் ஃபேக்டரியிலும் இருக்கிறது. அரசு நடத்துகிறது அதை. மத்திய அரசை அணுகி சிமென்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் வெட் ப்ராசஸ் என்பதை அடியோடு காலி செய்துவிட்டு டிரை பிராசஸ்-க்கு மாற்றவேண்டும் என்ற முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையிலே இருந்துகூட ஒவ்வொரு மாநிலத்திற்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திற்குக்கூட இது குறித்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து கடிதம் வந்து அதற்கான பதிலை எழுதியிருக்கிறோம். ஆகவே அவர்களும் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இது குறித்து விரைவில் சுமுகமான முடிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கு உதவிப்பணம்.

* 2083—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிற்சி மருத்துவர்களின் உதவிப் பணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.